சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 06.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **24/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | ம. தினேஷ்குமார் |
| தந்தை பெயர் | : | மணிவண்ணன் |
| கிராமம் | : | G3 Paris Apartment ,<br>பிச்சாண்டார் கோவில்,<br>திருச்சி. |
| தாலுக்கா | : | திருச்சி |
| தொழில் | : | காவல் துணை<br>கண்காணிப்பாளர் |
| வயது | : | 55 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரிகள் இருவரும் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.05.2020 ம் தேதி நான் திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது, கொரடாச்சேரி காவல் நிலைய குற்ற எண் 912/2020 என்ற வழக்கில் 19.05.2020 ம் தேதியன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி.ந.க. எண். 46 /SJ& HR/TVR /2020 உத்தரவின்படி என்னை புலன் விசாரணை செய்ய செயல்முறை ஆணை பிறப்பித்திருந்தார். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதைத்தொடர்ந்து 19.05.2020 ம் தேதியன்று காலை 09.00 மணியளவில் சம்பவ இடமான மலையூர் 1ம் எதிரி நடராஜன் வீட்டு முன்பாக சாட்சிகள் அ.சா.6 சுதாகர், அ.சா.7 குமார் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்தும்,அ.சா.ஆ.2 ஆன பார்வை மகஜர் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் அ.சா.3 தனபால், துர்கேந்திரன், அ.சா.4 மல்லிகா, அ.சா.2 சுமதி, அ.சா.6 சுதாகர், அ.சா.7 குமார், அ.சா.5 சதீஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்பு எதிரிகளை தேடி வந்த நிலையில் 17.06.2020 ம் தேதியன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில், தஞ்சையில் உள்ள கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் சரண்டராகி பிணை மனு தாக்கல் செய்து பிணையில் வெளியில் வந்துள்ளனர். பின்பு, அ.சா.1 சூர்யாவிற்கும், எதிரிகளுக்கும், ஜாதி சான்றிதழ்கள் கேட்டு கூத்தாநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பினேன். 07.07.2020 ம் தேதியன்று கூத்தாநல்லூர் சென்று எதிரிகள் நடராஜன் மற்றும் கங்காதரன் ஆகியோர்களுக்கு உரிய ஜாதி சான்றிதழ்களான அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஜாதி சான்றிதழ்களை சாட்சி அ.சா.8 ஆன திரு. கிருஷ்ணகுமார் என்ற துணை வட்டாட்சியரை விசாரணை செய்து அவரிடமிருந்த பெற்றேன். பின்பு கூத்தாநல்லூர் வட்டாட்சியர் அ.சா.11 திருமதி. தெய்வநாயகி அவர்களை விசாரித்து அவர்களிடமிருந்து அ.சா.1 ஆன சூர்யாவிற்கு அ.சா.ஆ.8 ஆன ஜாதி சான்றிதழ் பெற்றேன். பின்பு, இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.1 சூர்யாவை திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக

அனுமதித்த மருத்துவர் அ.சா.12 ஆன மருத்துவர் பிரபா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அ.சா.1 சூர்யாவிற்கு உரிய காயம் குறித்து அறிந்து கொள்ள அ.சா.9 மருத்துவர் நடராஜன் சேதுபதி அவர்களை அணுகியபோது மேற்படி மருத்துவர் இந்த அ.சா.1 சூர்யா என்பவர் மருத்துவமனையிலிருந்து தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் அவராகவே தன்னிச்சையாக வெளியில் சென்று விட்ட காரணத்தால் இவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் என்ன என்பது குறித்து கருத்து கூற இயலாது என கூறினார். இது தொடர்பாக நான் அவரிடம் கேட்டபோது, அவர் கருத்து கூற இயலாது என அ.சா.ஆ.6 ஆன சான்று வழங்கினார். பின்பு அ.சா.ஆ.7 ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அ.சா.10 வீரபரஞ்சோதி என்ற காவல் உதவி ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே, இவ்வழக்கில் சட்டப்பிரிவான 294 (பி), 323, 506 (1) இ.த.ச. உ/இ 3(1) (r), 3 (1) (s), 3(2) (va) of SC /ST (PoA) Act என்ற பிரிவினை 294 (பி), 324, 506 (1) இ.த.ச. உ/இ 3(1) (r), 3 (1) (s), 3(2) (va) of SC /ST (PoA) Act என மாற்றம் செய்து பிரிவு மாற்ற அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு, எனது புலன் விசாரணையை முடித்து 07.07.2020 ம் தேதியன்று எதிரிகள் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.06 17:30:57 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.